# திருஞானசம்மந்தரின் இலக்கியப் புதுமைகள்

முனைவர் க.புவனேஸ்வரி
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தேசியக்கல்லூரி
திருச்சி

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

சம்மந்தர் தமிழ்மொழியையும், சைவ சமயத்தையும் தமது இரு கண்களாகப் போற்றித் தமிழ்க் கலைகளையும் தமிழ்ப் பண்பாட்டு மரபுகளையும் காத்து வளர்த்தவர். தமிழ் உணர்வையும், மொழிப்பற்றையும் மக்களிடையே உருவாக்கி எழுச்சியை உண்டாக்கியவர். ஞான சம்மந்தரின் வாழ்வே பலவிதமான புதுமைகளும் அற்புதங்களும் நிறைந்தது. தமிழிசையில் எண்ணற்ற பண்களில் பாடல்கள் பாடியுள்ளார். அதைப்போலவே இலக்கியத்திலும் பல்வேறு புதுமைகளைப் புகுத்தித் தமிழ் மொழியை மேன்மேலும் மெருகேற்றிய பெருமை இந்த ஆளுடைய பிள்ளையைச் சேரும்.

**தமிழ்ஞானசம்மந்தர்**

கி.பி.7-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ்மொழிக்குச் சிறப்புச் செய்த தொல்காப்பியர், உலகப்பொதுமறை தந்த வள்ளுவர், சம்பந்தரின் சமகாலத்தவரான அப்பர், பின்னர் வந்த சுந்தரர் என எவருமே தங்கள் பெயருக்கு முன்னால் ‘தமிழ்’ என்ற அடைமொழியைக் குறிப்பிடவில்லை. ஆனால், சம்மந்தரோ தமது பாடல்களில் கிட்டத்தட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ்ஞானசம்மந்தன், தமிழ்விரகன், நற்றமிழ் ஞானசம்மந்தன் தமிழ்நாதன் என்று பலவாகத் தன் பெயரின் முன் தமிழ் என்று எழுதிப் பேருவகை அடைகின்றார். அதனால்தான் சுந்தரரும் இவரை ‘நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்மந்தன்’ என்று போற்றுகின்றார்.

**சம்மந்தரின் இலக்கியப் புதுமைகள்**

சம்மந்தர் தமிழ்மொழிக்குப் பல்வேறு வகையான புதிய இலக்கிய வகைகளைப் படைத்துத் தந்துள்ளார். ‘பதிகம்’ எனும் அமைப்புமுறை காரைக்கால் அம்மையாரின் பாடல்களில் காணப்பட்டபோதும். அதற்கு முறையான அமைப்பினை உருவாக்கிப் பாடியவர் சம்மந்தரே ஆவார்.

அதுபோலவே அந்தாதி, தூது போன்ற சிற்றிலக்கியங்கள் பிற்காலங்களில்தான் வகைப்படுத்தப்பட்டன. எனினும் அதற்கான அடிப்படைக் கூறுகளைச் சம்மந்தரின் தேவாரப் பாடல்களில் காணமுடிகின்றது.

புதிய யாப்பு முறைகளையும் சித்திர கவிகளையும் படைத்ததோடு மட்டுமின்றி இணைக்குறள் ஆசிரியப்பா, தரவுகொச்சகக்கலிப்பா, முதலான பாவகைகளையும், கலித்துறை, கலிவிருத்தம், வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம் முதலான பாவினங்களையும் கையாண்டுள்ளதுடன் யாப்பில் நாலடிமேல்வைப்பு, ஈரடிமேல்வைப்பு, திருவிருக்குறள், திருவிராகம், வழிமொழித்திருவிரகம், திருத்தாளச்சந்தி முதலான புதுமைகளைப் படைத்தும் இடைமடக்கு, ஏகபாதம், யமகம், திருவெழுகூற்றிருக்கை, மாலைமாற்று, சக்கரமாற்று, கோமூத்திரி, கூடசதுக்கம் முதலிய சித்திரகவிகளைப் பாடியும் புதுமையான இலக்கியவகைகள் தோன்ற வழிகோலியுள்ளார்.

**மாலைமாற்று**

ஒரு மலர்மாலையைத் துவக்கத்திலிருந்து பார்த்தாலும் முடிவில் இருந்து பார்த்தாலும் ஒன்றாகவே இருக்கும். அதுபோலவே பாடலின் முதல் எழுத்திலிருந்து படித்தாலும் கடைசி எழுத்திலிருந்து படித்தாலும் சொல்லும் பொருளும் ஒன்றாகவே இருப்பதால் இந்த இலக்கியவகை மாலைமாற்று எனப் பெயர் பெற்றது.

**யாமாமா நீ யாமாமா யாழீகாமா காணாகா**
**காணாகாமா காழீயா மாமாயா நீ மாமாயா**
**சம்மந்தர் தேவாரம் 3-ஆம் திருமுறை 117-ஆம் பதிகம்**

இது தமிழின் அதிசயப் பாடல் வகைகளில் ஒன்று. இப்பாடல் சம்மந்தர் அருளிய ‘மாலைமாற்றுப்’ பதிகத்தில் உள்ளது.

**யாம் ஆமா = நாங்கள் ஆன்மாக்கள் (ஆ - பசு)**
**நீ ஆமா மா = நீ ஆன்மாக்களின் தலைவனாகிய பரம்பொருள்**
**யாழீ = யாழை ஏந்தியவன்**
**காமா = அனைவராலும் விரும்பப்படுபவன்.**
**காண்நாகா = நாகம் (மலை)**
**யோகிகளுக்குக் காட்சியருளும் கைலாயமலையை உடையவன்**
**காணா = திருமால், பிரமனால் காணமுடியாதவன்**
**(அடிமுடி தேடிய படலம்)**
**கா மா காழீயா = (கா – சோலை மா – பெருமை)**

சோலைகளையும் பல பெருமைகளையும் உடைய சீர்காழியில் எழுந்தருளியுள்ளவன்.

**மா மாயா = (மா – திருமகள் மாயன் - திருமால்)**
**திருமகளுடன் கூடியதிருமாளும் நீயே**
**மா மாயா நீ = மாயை முதலிய மலங்களை நீக்குபவன்**

**ஏகபாதம்**

பாடலில் ஒரே அடி நான்கு அடிகளிலும் ஒரே முறையில் வரும். ஆனால், ஒவ்வோர் அடியும் வேறுவேறு பொருள் தரும். இதுவே, ‘ஏகபாதம்’ எனப்படும்.

**பொன்னடி மாதவர் சேர்புற வந்தவன்**
**பொன்னடி மாதவர் சேர்புற வந்தவன்**
**சம்மந்தர் தேவாரம் - முதல் திருமுறை 127-ஆம் பதிகம்.**

பொன் போன்ற அடிகளையுடைய மலைமகளை ஒரு பாகமாகத் கொண்டவன். மாதவம் செய்பவர்கள் வீழ்ந்து பணியும் பேரொளிவீசும் திருவடியை உடைய இறைவன். இவரது திருவடிகளைச் சரணடைந்தால் நற்கதி பெறலாம் என்று ஒரே பாடல் அடி மீண்டும்மீண்டும் வந்து பலவிதமான பொருளை உணர்த்தும் இந்த ஏகபாதம் (ஏகம் - ஒன்று, பாதம்-அடி) தமிழ்மொழிக்குச் சம்மந்தர் தந்த புதியவகைகளில் ஒன்றாகும்.

**திருவெழு கூற்றிருக்கை**

தேர், கோபுரம் போன்ற அமைப்புகள் வருமாறு 1,2,1 1,2,3,2,1 என்பது போலப் பாடுவதாகும்.

**ஓரிரு வாயினை மானாங்கரத்து**
**ஈரியல்பாய் ஒரு விண்முதல் பூதலம்**
**ஒன்றிய இரு சுடர் உம்பர்கள் பிறவும்**
**படைத்து அளித்து அழிப்பமும் மூர்த்திகள் ஆயினை**
**இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை**
**சம்மந்தர் தேவாரம் - முதல் திருமுறை 624-ஆம் பதிகம்.**

இப்பாடல் திருஎழுகூற்றிருக்கை எனும் வகையினதாகும்.

**பல்பெயர்ப்பத்து**

தமிழை வளர்க்க தமிழகத்தின் பல்வேறு திருத்தலங்களுக்குச் சம்மந்தர் சென்றாலும் தான் பிறந்து வளர்ந்து இறையருள் பெற்று ஞானப்பால் உண்ட பிரமாபுரத்தின் மீது அவருக்குத் தனியாக வேட்கை உண்டு. அனால்தான் அவர் பாடிய பல புதிய இலக்கிய வகைகளைப் பிரமாபுரத்தில் அருள்புரியும் பிரமபுரீஸ்வரர் மீதே பாடியுள்ளார். சம்மந்தரின் சொந்த ஊரான சீர்காழிக்குப் பல பெயர்கள் உண்டு. அவை:

1. பிரமாபுரம், 2. வேணுபுரம், 3. தோணிபுரம், 4. பூந்தராய், 5. பூம்புகலி, 6. வெங்குரு, 7. சிரபுரம் 8.புறவம், 9. சீகாழி, 10. சண்பைநகர், 11. கொச்சைவயம், 12. கழுமலம் என்று மொத்தம் 12 பெயர்கள் உண்டு.

இந்தப் பன்னிரெண்டு பெயர்களும் ஒரு பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் வரும்படிப் பாடியுள்ளார். இவ்வாறு பாடும் முறைக்குத்தான் 'பல்பெயர்ப்பத்து' என்று பெயர்.

**விளங்கிய சீர்ப்பிரமனூர் வேணுபுரம்**
**புகலி வெங்குரு மேற்சோலை**
**விளங்கவரும் தோணிபுரம் பூந்தாராய்**
**சிரபுரம் வண் புறவமண்மேல்**
**களங்கமிலூர் சண்பை கமழ்காழிவயம்**
**கொச்சை கழுமல மென்றின்ன**
**இளங்குமரன் றன்னைப் பெற்றிமையவர்தம்**
**பகையெரி வித்த இறைவனூரே**

**திருவிராகம்**

வழியெதுகை பெறாது முருகியல் மட்டும் பெற்ற பதிகங்கள் திருவிராகம் எனப்படும். முதல் திருமுறை 127 ஆம் பதிகம் இந்த வகையைச் சார்ந்ததாகும்.

**வழிமொழி**

ஒவ்வாரு சீரிலும் எதுகை அமையப்பாடுவது 'வழிமொழி' எனப்படும். இதில் முருகியல் நடையும் வரும். மூன்றாம் திருமுறை 67-ஆம் பதிகம் இந்த வகையைச் சார்ந்தது. இந்த வழிமொழி எனும் வகையே பின்னாளில் தோன்றிய திருப்புகழ் போன்ற சந்தவிருத்தங்கள் தோன்றக் காரணமாயிற்று. இப்பதிகத்தின் இறுதிப் பாடலில் தமிழின் சிறப்பு எழுத்தாகிய 'ழ' கரத்தைக்கொண்டு அனைத்து சீர்களையும் அமைத்திருப்பது அழகைத் தருகின்றது.

**சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்**
**பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்**
**உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய் ஞானம்**
**தவமுதல்வர் சம்மந்தர்தாம் உணர்ந்தார்** **(பெரியபுராணம் - 1147)**

என்று சேக்கிழாரால் புகழப்படும் ஞானப்பால் உண்ட ஞானக்குழந்தையான சம்மந்தர் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் சைவசமயத்தின் எழுச்சிக்கும் வித்திட்டதோடன்றி, தமிழ் இலக்கியம் வளரவும் வாழவும் புதிய இலக்கிய வகைகளைத் தமிழுக்குத் தந்து தழைத்தோங்கச் செய்துள்ளார்.